தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## எசேக்கியா - Hezekiah



கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 13 ஜனவரி 2013 கனி 2

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office on 10 th Jan. 2013

To

வருஷத்தை உம்முடைய நன்மையால்
முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள்
நெய்யாய்ப் பொழிகிறது
சங்கீதம் 65:11

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA




BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

- யூதாவின் ஜனங்களை ஆண்டுவந்தான் இவனுடைய தகப்பன் ஆகாஸ் - (2இரா.18:1)
- மரணத்துக்கு ஏதுவான வியாதிகொண்டிருந்தான் - (ஏசா.38:1)
- இவனுடைய கண்ணீரின் விண்ணப்பத்தைக் கேட்டு 15 வருடத்தைக் கூட்டினார் - (ஏசா.38:5)
- எசேக்கியாவின் நாட்களில் ஆகாசுடைய சூரியகடிகாரம் இருந்தது - (ஏசா.38:7)
- பின் சந்ததிக்கு கர்த்தர் தனக்கு செய்த அற்புதத்தை எழுதிவைத்தான் - (ஏசா.38:20)



எசேக்கியா - Hezekiah

- எசேக்கியாவின் நாட்களில் ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தார் - (ஏசா.38:1)
- எசேக்கியாவின் இறுதிநாட்களில் பாபிலோனின் ராஜாவுக்கு தன் பொக்கிஷ சாலைகளை திறந்து காண்பித்து ஏமாற்றப்பட்டான் - (ஏசா.39:2)

# 2013-ம் வருடம்

நீ விழித்திருந்து ஜெபிக்கும்படியாக கொடுக்கப்பட்டது - மாற்கு 13:33

விழித்திருந்து காக்கும்படியாக கொடுக்கப்பட்டது - மாற்கு 13:34

தாங்காதபடி விழித்திருக்கும்படியாக கொடுக்கப்பட்டது - மாற்கு 13:36



## விழித்திருங்கள் விசுவாசத்தில் நிலைத்திருங்கள்

“Go ye into all the world, and preach the gospel to every creature” - Mark 16:15

“The Churches Of Christ Salute you” Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



# வேத அறிவுப் போட்டி எண்: 149

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. நீதியின் வழியில் உண்டாகும் நரைமயிரானது எப்படிப்பட்ட கிரீடம்?
2. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப்போராடு என்று பவுல் யாருக்கு எழுதினார்?
3. கர்த்தர் என்னை இரட்சிக்கவந்தார்; ஆகையால் எங்கள் ஜீவநாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே என் கீதவாத்தியங்களை வாசித்துப்பாடுவோம் என்று எழுதிவைத்த ராஜா யார்?
4. தீமோத்தேயுவின் பாட்டியின் பெயர் என்ன?
5. உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன் என்று எழுதும் தீர்க்கதரிசி யார்?
6. இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது எவருக்கு ஏற்றதாயிருந்தது?
7. எங்கள் தண்ணீரைப் பணத்துக்கு வாங்கிக் குடிக்கிறோம்; எங்கள் விறகு விலைக்கிரயமாய் வருகிறது என்று புலம்பும் தீர்க்கன் யார்?
8. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?
9. நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதி செய்து அதிலே செத்தால், அவன் செய்த தன் அநீதியினிமித்தம் அவன் என்னாவான்?
10. எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; எவருக்குப் பயந்திருங்கள் என வேதம் கூருகிறது?

### எசேக்கியா ராஜா ஒரு பார்வை...

- கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதைச் செய்தான் - 2இரா.18:3
- மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்ட (அதற்கு இஸ்ரவேலர் தூபம்காட்டிவந்தனர்) - (2இரா.18:4)
- கர்த்தர்மேல்வைத்த நம்பிக்கையிலே அவனுக்கு முன்னும் பின்னு யூதராஜாக்களில் ஒருவரும் அவனைப்போல் இல்லை - (2இரா.18:5)
- மோசேயின் கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான் - (2இரா.18
- கர்த்தர் எசேக்கியாவோடு இருந்தார் - (2இரா.18:7)
- இவனுடைய நாட்களில் கர்த்தருடைய தூதன் அசீரியரின் பாளைய லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான் - (2இரா.19:35)
- எருசலேமிலே இருபத்தொன்பது வருஷம் அரசாண்டான் - (2இரா.18:2)




"நல்லவன் கர்த்தரிடத்தில் தயை பெறுவான்" நீதிமொழிகள் 12:2

சிறுவர் பகுதி

# தேறின வேதபாரகன்

**வேத பகுதி:எஸ்றா 7:1–10**



இஸ்ரவேலிலே தேறின வேதபாரகனாக எஸ்றா இருந்தான். இவன் பிரதான ஆசாரியனான ஆரோனின் குமாரன். இன்றைக்கு பார்த்தீர்களென்றால் கிறிஸ்தவ ஊழியரின் மகன் மிகப் பெரிய, பெரிய வேலைகளில் இருக்க வேண்டுமென்று முயற்சி எடுக்கிறார்கள். ஆனால் எஸ்றாவோ அப்படியில்லை தன் தகப்பனுடைய வழியிலேயே அவன் ஒரு சிறந்த வேதபாரகனாக இருக்கிறான். தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனாயிருந்தான். இப்படி அவன் இருந்தபடியால் கர்த்தருடைய கரம் அவன்மேல் இருந்தது. அதுமட்டுமா?

அர்த்தசஸ்டா என்ற ராஜா அவன் கேட்டதை எல்லாம் கொடுத்தார். எப்படி அவன் கேட்டதை எல்லாம் கொடுத்திருப்பான். அந்த அளவுக்கு எஸ்றா, ராஜாவின் பார்வையில் மிக நல்லவனாகவும், கர்த்தருக்கு பயப்படுகிறவனாகவும் இருந்தபடியால் தேவன் ராஜாவின் கண்களில் கிருபை கிடைக்கும்படி செய்திருக்கிறார். நாம் ஆண்டவருக்கென்று ஊழியம் செய்யும்போது சகல ஜனங்களிலும் நமக்கு கிருபை கிடைக்கும்படி செய்வார். காரியங்களையும் கைகூடிவரச் செய்வார். இவையெல்லாம் நன்கு அறிந்த எஸ்றா சகலத்தையும் பெற்று அனுபவித்தான். நீங்களும் இந்த எஸ்றாவைப்போல வேதாகமத்திலும் ஆண்டவருடைய கட்டளைகளை மனப்பாடம் செய்வதிலும் அவைகளை கைக்கொள்வதிலும், தேர்ச்சி அடைவீர்களா! அப்படி தேர்ச்சி அடைவீர்கள் என்றால் கர்த்தர் எஸ்றாவோடு இருந்தது போல உங்களோடும் இருப்பார்.

மேலும், எஸ்றா கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதன்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும், நீதி நியாயங்களையும், உபதேசிக்கவும், தன் இருதயத்தை பக்குவப்படுத்தி இருந்தான். கர்த்தருடைய வேதத்தை கேட்கிற நாம் அதை குறித்து அசட்டையாக இருக்கலாமா? அநேகர் பாருங்கள் பிரசங்கியார் பிரசங்கிக்கும்போது அடுத்தவனை கூப்பிடுவது, அடுத்தவனை கில்லி வைப்பது மேலே எதையாவது பார்த்துக்கொண்டு இருப்பது. இப்படியெல்லாம் செய்யலாமா? கூடாதே! பெரோயா பட்டணத்தார்களைப்போல ஆராயவும், அதன்படி செய்யவும் முயற்சிக்கவேண்டும். புதையல்களை தேடுகிறதுபோல தேடினால் தானே ஆசீர்வாதங்களை சுதந்தரிக்கமுடியும். அப்படிச் செய்வீர்களா! எஸ்றாவைப் போல வளருங்கள் கர்த்தர் உங்களோடு இருப்பார். இந்த ஆண்டில் இப்படி செய்வீர்களா!

**மனப்பாட வசனம்:**

“கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதி, நியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தை பக்குவப்படுத்தியிருந்தான்” (எஸ்றா 7:10)




# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
## THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 13 ஜனவரி–2013 கனி - 2


ஆசிரியருரை

## உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்
## Examine Yourselves



ஒரு மனிதனுடைய வாழ்வில் தற்சோதனை அவசியம். **நம்மை நாமே முதலாவது சோதித்து அறியவேண்டும்.** எந்த ஒரு பயிற்சிக்கும் தற்சோதனை செய்துகொள்கிறோம். அப்பொழுதே தேர்வில் வெற்றிபெறமுடியும். தற்சோதனை செய்யாமல் தேர்வில் வெற்றியடைவது என்பது கூடாதகாரியம். ஆகையால் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதும் கடிதத்தில் “நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே பரீட்சித்துப்பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்” என்று எழுதுகிறார் (2கொரி.13:5). ஒரு மனிதனுடைய விசுவாசவாழ்க்கை அவனை இரட்சிப்புக்கு நேரே வழிநடத்துகிறது. ஆகையால் ஒவ்வொருவருக்கும் விசுவாசம் என்பது அவசியம். இந்த விசுவாசத்தை நாம் கிரியைகளின் மூலமாக காண்பிக்கமுடியும். கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது. “ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது” எனக் காண்கிறோம் (கலா.3:6). காணாதவைகளை நம்புவதே விசுவாசம். இந்த விசுவாசம் ஆபிரகாமிடம் இருந்தது. அது நமக்குள்ளும் இருக்கும்போது நாமும் ஆபிரகாமின் பிள்ளைகளாக இருப்போம். கர்த்தரும் இவ்வருடத்தில் நம்மோடிருப்பார்.

நம்முடைய முற்பிதாக்கள் “விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்” என்று எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் (எபி.11:33,34). இவர்கள் எல்லோரும் விசுவாசத்தினாலே எல்லாவற்றையும் முறியடித்தார்கள். இன்றைக்கு நமக்குள்

அந்தவிதமான விசுவாசம் இருக்குமேயானால் நாமும் ராஜ்யங்களை ஜெயிக்கமுடியும். மிகவும் சாதாரண விஷயங்களை நம்மால் மேற்கொள்ளமுடியாவிட்டால் பின்பு எப்படி நம் முற்பிதாக்களைப்போல அக்கினியின் உக்கிரத்தை அவிக்கப்போகிறோம். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு வாசகரே! உன்னை நீயே சோதித்துப்பார். பெரும்பாடுள்ள ஸ்திரீயைப் பற்றி படித்திருப்பீர்கள். அவள் தன் உள்ளத்தின் ஆழத்தில் ஆண்டவர் இயேசுவை விசுவாசித்தாள். எப்படியென்றால் அவரால் கூடாதது ஒன்றுமில்லை அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும், தான் எப்படியாவது தொட்டு இந்த பெரும்பாடிலிருந்து விடுதலையாகவேண்டும் என்ற எண்ணம் அவளுக்குள் இருந்தது. அவ்வளவு திரளான கூட்டத்தின் மத்தியில் இருந்த இயேசுவை தொட்டு பரிபூரண சுகமானாள். ஆகையால் ஆண்டவர் இயேசு அவளைப் பார்த்து; "மகளே, திடன்கொள் உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது; சமாதானத்தோடே போ என்றார்" (லூக்.8:48). அவளுடைய விசுவாசம் அவளுக்கு சுகத்தைக் கொடுத்தது. உங்களுக்குள்ளும் அந்தவிதமான நம்பிக்கை இருக்குமேயானால் நீங்களும் குணமாக்கப்படுவீர்கள். உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டதென்று முதலாவது சோதித்து அறியுங்கள்.

**இரண்டாவது, "கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று சோதித்துப்பாருங்கள்" (எபே.5:10).** நாம் யாருக்குப் பிரியமாய் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்? நமக்காகவே வாழாமல் கர்த்தருக்குப் பிரியமானது எது என்பதை வேதாகமத்தின் துணைகொண்டு அறிந்து செயல்படுவோமானால் நாம் அதிகமாக ஆசீர்வதிக்கப்படுவோம். பொதுவாக "விவாகம்பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்... அதுபோல, விவாகம்பண்ணினவள் தன் புருஷனுக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்" என்று பவுல் குறிப்பிடுகிறார் (1கொரி.7:33,34). இந்த விதமான கவலை உலகத்தில் உள்ள எல்லா குடும்பங்களிலும் இருக்கிறது. இருவரும் சேர்ந்து கர்த்தருக்கு எப்படிப்பிரியமாயிருக்கலாம் என்ற முடிவுக்கு வரவேண்டும். அப்பொழுது தான் அக்குடும்பங்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ந்துபெருக முடியும். கர்த்தருக்குப் பிரியமானதையும் செய்யமுடியும். நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள். நாம் நம்முடையவர்கள் அல்ல என்பதை முதலாவது நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். "கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" என்கிறார் பவுல் (1கொரி.6:20). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்டவர்களாக இருக்கிறோம். பிதாவாகிய தேவன் இருளின் அதிகாரத்தினின்று நம்மை மீட்டு தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கப்பண்ணியிருக்கிறார். ஆகையால் தேவனுக்குச் சொந்தமான இந்த சரீரத்தினாலும் ஆவியினாலும் நாம் தேவனை மகிமைப்படுத்தவேண்டும். இது கர்த்தருக்குப்பிரியமானது. தேவன் மனிதனுடைய



# எருசலேம்

-K.R.K.Ravi Asir



சுமார் கி.மு 444-ம் ஆண்டில் நெகேமியாவின் தலைமையின் கீழ் எருசலேம் திரும்ப கட்டி முடிக்கப்பட்டது. கிரேக்க ராஜ்யத்தின் காலத்தில் மகா அலெக்ஸாண்டரின் அதிகாரத்தின் கீழ் எருசலேம் இருந்தது. அவனுக்கு பின் அவனுடைய தளபதியாகிய டாலமி என்பவன் எருசலேமை ஆட்சிசெய்தான்.

கி.மு.203-ம் ஆண்டில் சீரியாவின் தளபதியாகிய அந்தியோகஸ் எருசலேமை தன் ஆட்சிக்குட்படுத்தினான். அவனுடைய குமாரனாகிய அந்தியோகஸ் எபிபேனஸ் என்பவனுடைய காலத்தில் யூதர்கள் துன்பப்படுத்தப்பட்டனர். மக்கபேயர் என்னும் ஆசாரிய பரம்பரையினர் யூதர்களின் சுதந்தரத்திற்காக யுத்தம் செய்து எருசலேமை கைப்பற்றினர். கி.மு 63-ல் பாம்பே என்ற ரோம சக்ரவர்த்தி எருசலேமை ரோமசாம் ராஜ்யத்தின் ஆளுகையின் கீழ் கொண்டுவந்தான். கி.பி 70-ம் ஆண்டில் தீத்து என்னும் ரோமராயன் எருசலேமை தீக்கிரையாக்கினான்.

எருசலேமில் சபை (கர்த்தருடைய ஆலயம், கிறிஸ்துவின் சபை, பரலோகராஜ்யம், தேவனுடைய ராஜ்யம்) ஸ்தாபிக்கப்படும் என்று பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் தீர்க்கதரிசனமாக முன்னுரைக்கப்பட்டிருந்தது (ஏசாயா2:2-4; தானி.2;44; ஏசாயா 11:1-4; லூக்கா24:46-48; அப்.1:4-8). தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியே சபை எருசலேமில் துவக்கப்பட்டது. சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டு கி.பி.33 ஆகும் (அப்.2:1-2; 38,41,47) பரலோகராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபைக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார் (எபே.1:23); 5:23; கொலோ.1:18). நியாயப்பிரமாணத்தை இயேசு கிறிஸ்து சிலுவையிலே நிறைவேற்றி முடித்தபின்னும் (கொலோ.2:14-15; எபி.8:13) பலர் நியாயப்பிரமாணத்தை பின்பற்றுகிறவர்களாயிருந்தார்கள் நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது (ரோம.4:15) என்று புதியஏற்பாடு நமக்குப் போதிக்கிறது. யூதர்கள் எருசலேமை குறித்தும், அதன் தேவாலயத்தைக்குறித்தும் அதிகமாக மேன்மை பாராட்டினார்கள். எனவே தான் கர்த்தர் எருசலேம் தேவாலயத்தின் கட்டடங்களை குறித்து; "ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுபோகும்" என்று தீர்க்கதரிசனமாக உரைத்தார் (மத்.24:1-2). இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக கி.பி.70-ல் எருசலேம் நகரம் அழிக்கப்பட்டது ஆலய கட்டுமான கற்களுக்கு இடையே பொன்னை வைத்து சாந்து பூசியிருந்ததாக செய்தி பரவியது. இந்த காரணத்தினாலேயே சத்துருக்கள் எருசலேம் தேவாலயத்தை ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு இடித்துப்போட்டார்கள்.

கி.பி.70-கி.பி.637-ம் ஆண்டு வரை எருசலேம் ரோமசாம்ராஜ்யத்தின் கீழ் இருந்தபோதிலும், யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் எருசலேம் நகரம் மிகமுக்கியமான ஸ்தலமாக இருந்தது. இந்நகரம் கி.பி.637முதல் 1517 வரை துருக்கியர்களுடைய ஆளுகையின் கீழ் இருந்தது. இச்சமயத்தில் கிறிஸ்தவர்களுக்கும் பெரும் உபத்திரவம் ஏற்பட்டது. அவர்கள் தேவாலயம் இருந்த இடத்தில் மசூதிகளை கட்டினார்கள். கி.பி.1517 முதல் 20-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட முதல் உலகப்போர்வரையில் துருக்கியர்கள் முஸ்லீம் மதத்தை வெகுவாய் பரப்பியபடியால் எருசலேம் பெயர் அற்றுப்போயிற்று இந்த நகரம் பின்பு பிரிட்டிஷ் நாட்டு ஆளுகையின் கீழ் வந்தது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் 1948-ம் ஆண்டு ஜீன்மாதத்தில் மறுபடியும் எருசலேம் யூதர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டது. ஆயினும் அதன் ஒரு பகுதி துருக்கியர்கள் வசம் இருந்தது. அதற்கு பின் ஏற்பட்ட யுத்தத்தில் (6 நாள் யுத்தம்) எருசலேம் நகரம் முற்றிலும் யூதர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டது.

வருகிறோம். கடல்நீர் நிலத்தில் வராது என்ற நம்பிக்கை. அதுமட்டுமல்லாமல் இதுவரை அதுபோல கடல்வரவில்லை என்ற நம்பிக்கை தான் ஆனால் பார்த்தீர்களா இந்தோனேஷியாவில் ஏற்பட்ட கடல்கொந்தளிப்பு நமக்கு ஒரு சிறு செயல் தான் அதற்கே எவ்வளவு உயிர்கள் போனது தெரியுமா அப்போது இந்தோனிஷியாவில் எவ்வளவு உயிர்கள் போனது! இதுவெல்லாம் தேவன் நமக்கு தரும் எச்சரிப்புதான்.

அதுமட்டுமல்லாமல் இன்று உலகிலேயே மிகுந்த வல்லரசு நாடாக இருக்கும் அமெரிக்கா இதுவரை அவர்கள் காணாத அளவிற்கு கத்ரினா, ரீட்டா என்றதான பெறும் புயலை சந்தித்தது அங்கு பலர் இறந்தார்கள். அதே போல சீனாவில் பெல்புயல், பாகிஸ்தானில் முசரபாத் என்னும் இடத்தின் நிலநடுக்கம் அதிலே எவ்வளவு உயிர்கள் போனது, நமது நாட்டிலே காஷ்மீரில் நிலநடுக்கம் தமிழகமெங்கும் வரலாறு காணாத அளவிற்கு தொடர்மழையினால் பல வீடுகள், பல பாலங்கள், மனிதனின் உயிர்கள், மனிதனால் அசைக்கப்படாத பல அணைகள் உடைப்பு, ஏரிகள் உடைப்பு . இவைகளெல்லாம் கண்டும், கேள்விப்பட்டும் நாம் நம் வாழ்வைக் குறித்து எச்சரிப்பு அடையவேண்டும். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது. நாம் இப்போது கடைசி காலங்களில் வாழ்ந்து வருகிறோம். இவர்களுக்கு எல்லாம் நேரிட்ட செயல் நமக்கும் நேரிடாது என்பதற்கு என்ன ஆதாரம் இன்றோ அல்லது நாளையோ நமக்கும் நடக்கலாம் ஆகையால் கடைசியாக எச்சரிப்பை பார்ப்போம். (அப்:17:30,31) அறியாமையுள்ள காலங்களில் தேவன் காணாதவர் போலிருந்தார் ஆனால் இப்போதோ எல்லோரும் மனம் திரும்பவேண்டும் என்று கட்டளையிட்டியிருக்கிறார். ஆகவே மனம் திரும்பாமல் யாராவது இருந்தால் உடனே மனம்திரும்பும்படியாகவும் அப்படி மனம்திரும்பி கிறிஸ்துவுக்குள் வாழும் கிறிஸ்தவர்களுக்கு நியாயத்தீர்ப்பு ஒன்று இருக்கிறது. கிறிஸ்துவின் வருகை மிகவும் சமீபத்தில் இருக்கிறது. ஆகவே எல்லோரும் எல்லா செயல்களிலேயும் மிகவும் ஜாக்கிரதையாக இருப்போம், தேவனுக்கு முன்பாக இன்னும் அதிக பக்தியாக இருப்போம், தேவன் தாம் இன்றும் என்றும் நம் அனைவரோடும் சதாகாலங்களிலும் இருப்பாராக ஆமென்.

## நடப்புச் செய்திகள்

- மியான்மர் நாட்டில் இந்த ஆண்டு, முதன் முறையாக புத்தாண்டு கொண்டாடப்பட்டது.
- நடப்பு 2015-ம் ஆண்டில், நாட்டின் பால் உற்பத்தி, 13.55 கோடி டன்னைத் தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- பொங்கல் பண்டிகைக்கு 5கோடி இலவச வேட்டி சேலை, ஜனவரி 1-ம் தேதி முதல் வினியோகம்.
- 2013ஐ பெண்கள் பாதுகாப்பு ஆண்டாக அறிவிக்க ராஜ்ய சபா எம்.பி கோரிக்கை.
- வெளிநாட்டு பயணிகளுக்கு பிரத்யேக, 'ஹெல்ப் லைன்' போன் எண்களை, மத்திய சுற்றுலா துறை விரைவில் அறிமுகம் செய்ய உள்ளது.



கைகளில் பணிவிடைகளை ஏற்றுக்கொள்ளார் என்பதை அறிவீர்களா! ஆனால் மனிதனுடைய எண்ணமெல்லாம் அவருக்காக ஏதாவது ஒன்றைசெய்யவேண்டும். கைநிறைய காணிக்கை போடவேண்டும். அல்லது விலையேறப்பெற்ற ஒரு கட்டிடத்தை அவருக்குக் கட்டவேண்டுமென்பதே. அன்பு நேயரே, அந்த இடத்தில் தேவன் வந்து வாசம் செய்வாரா? அவர் உங்கள் உள்ளத்தில் வந்து வாசம் செய்யவிரும்புகிறார். நீங்களே தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் செய்கிறதில்லை.

**நம்மை நாமே சோதித்து அறியவேண்டிய பகுதியில் மற்றொன்று; கர்த்தருடைய பந்தி:** பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதிய நிருபத்தில் இதை தெரியப்படுத்துகிறார். ''எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்'' என்கிறார் (1கொரி.11:28). நாம் எதற்காக கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்கிறோம் என நாம் நிதானித்து அறியவேண்டும். சிலர் எதற்காக பந்தியில் பங்குகொள்கிறோம் என்று அறியாது அதை ஒரு புனிதமாகவும், பாரம்பரிய சடங்காகவும் அநுசரிக்கின்றனர். நாம் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளும்போது; ஆண்டவர் எனக்காக இரத்தம் சிந்தி, என்னை பாவத்திலிருந்து மீட்டு எடுத்துள்ளார். நான் அவருக்குப் பிரியமாய் வாழ்ந்துகொண்டிருக்கிறேனா? என்னுடைய சரீரத்தை வேசியின் சரீரமாக வைத்துள்ளேனா? நான் குற்றமுள்ள மனச்சாட்சியுடையவனாக வாழ்ந்துகொண்டு வருகின்றேனா? இப்படி அநேக கேள்விகளை நமக்குள் கேட்டு, நம்மை நாமே சோதித்து அறிந்தவர்களாக அதில் பங்குகொள்ளவேண்டும். அநேகர் அதில் பங்குகொள்ள எனக்குத் தகுதியில்லை என்று கர்த்தருடைய பந்தி சமயத்தில் வெளியே எழுந்துபோய் விடுகிறார்கள். அதுவும் தவறான ஒன்றாகவே இருக்கிறது. ஏனெனில்; ''என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனில் நிலைத்திருக்கிறேன்'' என்கிறார் (யோவா.6:56). நாம் மீண்டும் மீண்டும் பாவம் செய்வோமானால் அவரை மீண்டும் மீண்டும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறோம் என்று தான் பொருளாகிவிடும்.

ஆகையால், பவுல் சொல்வதைப்போல; ''நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்'' (ரோம.6:13). நீங்கள் உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா? ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கும்போது முழுமையுமாக ஒப்புக்கொடுக்கப் பழகுங்கள். இன்றைக்கு அநேகர் பாதியை உலகத்திற்கும், பாதியை தேவனுக்கும் ஒப்புக்கொடுக்கிறார்கள். உன் அதிபதிக்கு ஒரு பழத்தில் பாதியை கொடுத்துப்பார், அப்பொழுது அவன் அதை

ஏற்றுக்கொள்வானா? உலக அதிபதிக்கு நாம் நலமான காரியத்தை கொடுக்க அறிந்திருக்கும்போது நம்மை உண்டாக்கின தேவனுக்கு நம்மை முழுவதுமாக அற்பணிக்கவேண்டாமா? ‘‘நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்’’ (ரோ.6:6). ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின என்று சொல்லப்பட்ட வசனத்தின்படி புதுசிருஷ்டியாயிருக்கிறான். நீங்கள் புதுசிருஷ்டியாயிருக்கிறீர்கள் ஆகையால், உங்களுடைய செய்கைகள் எல்லாம் புதியவைகளாகவே இருக்கட்டும். ‘‘என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்’’ என காண்கிறோம் (1கொரி.11:29).

நாம் நம்மை முதலாவது சோதித்து பார்க்கவேண்டிய மூன்று காரியங்களை இச்செய்தியின் வாயிலாக தியானித்தோம். ஒன்று நாம் விசுவாசமுள்ளவர்களோவென்று நம்மை நாமே சோதித்து அறியவேண்டும். இரண்டாவது கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று சோதித்து அறியவேண்டும். மூன்றாவது தன்னைத்தானே சோதித்து அறிந்து கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளவேண்டும். இந்த மூன்று காரியங்களில் நீங்கள் உங்களை சோதித்து அறியுங்கள். எதில் நாம் குறைவாக இருக்கின்றோமோ அதை நம்முடைய வாழ்க்கையில் சரிசெய்துகொள்ளவேண்டும். பூமியில் நமக்கு சரிசெய்துகொள்வதற்கான காலஅவகாசம் அதிகமாக இருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொண்டு கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்ய நாடுங்கள்.

**நாம் நியாயந்தீர்க்கப்படாதிருக்க செய்யவேண்டியது என்ன?**

நியாயத்தீர்ப்பு என்பது கர்த்தருடைய கரத்தில் இருக்கிறது. நாமெல்லாரும் ஒரு நாளில் நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நிறுத்தப்படுவோம். கர்த்தர் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே நம்மை நியாயந்தீர்ப்பார். பவுல் சொல்கிறார்; ‘‘நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்’’ என்கிறார் (1கொரி.11:31). நாம் எப்படி ஜீவித்துக்கொண்டிருக்கிறோம்? நம்மிடத்தில் ஆவிக்குரிய கனிகள் காணப்படுகிறதா? வேதவசனத்தின் படி வாழ்ந்துகொண்டிருக்கிறோமா? போன்ற கேள்விகளை நம்மில் எழுப்பி அதற்கேற்றார்போல நம்மை மாற்றியமைத்துக்கொண்டு வாழ்வோமேயானால் நியாயத்தீர்ப்புக்கு தப்புவிக்கப்படுவோம். ஏனெனில் ‘‘சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்’’ என்கிறார் பவுல் (2கொரி.5:10). இந்த போதனை நியாயத்தீர்ப்புக்கு முன்பாக அனைவரும் நிற்போம் என்பதை உறுதிப்படுத்துகிறது. இதற்கு தப்பிக்கொள்பவன் ஒருவனும் இல்லை. ஆகையால் நாம் நம்மை முதலாவது நிதானித்து அறிந்து மற்றவர்களைக்




பார்க்கிறோம். புதிய ஏற்பாட்டில் அநேக எச்சரிப்பு இருந்தாலும் அதிலே ஒன்று மட்டும் பார்ப்போம். பொருளாசையைக் குறித்து லூக்கா 12:15-21-ம் வசனத்தில் பார்க்கும்போது இன்றைக்கு மனிதர்கள் இரவு பகலாக கண்விழித்து பணம், பொருள், ஆஸ்திகள் போன்றவைகளை சம்பாதிக்க கூடிய மனிதர்களாயிருக்கிறார்கள்.

நாம் லூக்கா புத்தகத்திலே வாசிக்கும்போது இயேசு கிறிஸ்து ஒரு உவமையை சொல்லும் போது ஒருவன் தன் நிலம் நன்றாய் விளைந்ததைப் பார்த்து நான் என்ன செய்வேன் தானியங்களைச் சேர்த்து வைக்க இடமில்லையே என்று புலம்பி களஞ்சியங்களை இடித்து பெரிதாக கட்டி விளைந்த தானியங்களைச் சேர்த்து வைத்து என் ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்கு அதிகமான பொருள் சேர்த்துவைக்கபட்டிருக்கிறது. நீ இளைப்பாறி புசித்து குடித்து பூரிப்பாயிரு என்று தன் ஆத்துமாவிலே சிந்தித்து கொண்டு இருந்தான் ஆனால் தேவனோ அவனுக்கு ஒரு எச்சரிப்பை சொன்னதாவது, மதிகேடனே உன் ஆத்துமா இன்று இராத்திரியிலே உன்னிடத்தில் இருந்து எடுத்துகொள்ளப்படும் அப்போது நீ சேகரித்தவை யாருடையதாகும் என்று கேட்கிறதைப் பார்க்கிறோம்.

ஆம் பிரியமானவர்களே, இந்த பூமியில் மனிதர்கள் இப்படியாக தான் சரீர பிரகாரமாக தான் உயர்ந்தவனாகவும், பலர் மதிக்கக்கூடிய மனிதனாகவும் செல்வங்கள் அதிகமாக மிகுந்தவனாகவும் வாழவேண்டும் என்று சிந்தித்து கொண்டு செயல்படுகிறான் என்று பார்க்கிறோம். அதேபோல் தான் இயேசுவினிடத்தில் ஒருவன் வந்து நல்லபோதகரே நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு இயேசு நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன் தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே என்று மாற்கு 10:18-ம் வசனத்தில் பார்க்கும்போது நீ கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்று கேட்டார்; அவனோ இவைகளையெல்லாம் என் சிறு வயது முதற்கொண்டு கடைபிடித்துக்கொண்டு வருகிறேன் என்றான் மேலும் இயேசு உன்னிடத்தில் ஒருகுறை உண்டு நீபோய் உன் ஆஸ்திகளை எல்லாம் விற்று தரித்திரருக்கு கொடு என்றார். அப்போது பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் உண்டாகும் என்றார். அவனோ, மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் மனமடிந்து திரும்பிபோனான் என்று மாற்கு 10:20-22 வரை பார்க்கிறோம். அப்படி பொருள் மீது அல்லது பணத்தின் மீது ஆசையுள்ளவர்களைப் பார்த்து தான் எச்சரிக்கையாய் இருங்கள் என்று தேவன் இப்போது உரைக்கிறார் என்று பார்க்கிறோம். அதேபோல நமக்குதேவன் இந்த பூமியில் தொடர்ந்து எச்சரிப்பை கொடுத்துக்கொண்டு வருகிறார். கடந்த நாட்களிலே பல இடங்களில் உயிர்ச்சேதங்கள், பொருள்சேதங்கள். இது நமக்கும் கூட ஒரு எச்சரிப்பு தான். அந்த செயல் நமது ஊர்களில் நடப்பதற்கு எவ்வளவு நேரம் ஆகிவிடும் அதேபோல தான் கடந்த 26-12-2004 அன்று காலையில் இதுவரை கண்டிராத செயல் நடந்தது என்னவென்று தெரியுமா? சுனாமி தான் ஆம் பிரியமானவர்களே நாம் எதற்கு கடலோரங்களில் வீடுகட்டிக்கொண்டு வசித்து

# எச்சரிப்பு

**C.Vellusamy**



பிதாவாகிய தேவனுக்கு ஆண்டவர் இயேசுவின் மூலம் துதிகன மகிமை உண்டாவதாக! கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே நான் தேவனுடைய கிருபையால் எச்சரிப்பு என்ற தலைப்பின் கீழாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். தேவன் வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின பிறகு கடைசியாக மனிதனை உண்டாக்கினார். இந்த பூமியில் முதல் மனிதனாகிய ஆதாமுக்கு தேவன் எச்சரித்த வார்த்தையானது (ஆதி. 2:16,17) நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப்புசிக்க வேண்டாம். அப்படி புசித்தால் சாகவே சாவாய் என்று தேவன் எச்சரித்தார். ஆனால் ஆதாம் தேவனுடைய வார்த்தையை மீறி பிசாசின் வார்த்தைக்குக் கீழ்படிந்து ஏவாளின் நிமித்தம் கனியை சாப்பிட்டான். அதன்பிறகு தேவன் மிகவும் அழகு வாய்ந்த ஏதேன் தோட்டத்தை விட்டு விரட்டினார் அதுமட்டுமல்லாமல் உன் நிமித்தம் இந்த பூமி சபிக்கப்பட்டது என்றும் நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனை புசிப்பாய் என்றும் தேவன் எச்சரித்தார் என வேதத்தில் மிகவும் தெளிவாக பார்க்கிறோம்.

நோவாவின் காலத்திலே வாழ்ந்த மக்கள் தேவனுக்கு விரோதமாக பாவங்கள், அக்கிரமங்கள் பெருகினதால் தேவன் முதன் முறையாக உலகத்தை (அ) பூமியை அழிக்க முடிவெடுத்தார். அதன் பிறகு நோவாவின் மூலம் மக்களுக்கு 40 நாள் மழைபெய்து தண்ணீரினால் பூமியை அழிப்பேன் என்று எச்சரித்தார் அவர்களோ கீழ்ப்படியாமலும் நோவாவை கேலி செய்து நகைத்தார்கள் (ஆதி: 6:5, 6,13) தேவன் வசனத்தில் சொன்னது போல் 40 நாள் மழை பெய்து பூமி அழிந்தது என்று பார்க்கிறோம்.

சோதோம் பட்டணத்தில் அக்கிரமங்கள் பெருகினபடியால் அழிப்பதற்கு தேவன் தூதரை அனுப்பினார் அங்கு தேவன் தூதர் மூலம் லோத்தின் குடும்பத்திற்கு எச்சரித்தது என்னவென்றால் உனது உறவினர்களை கூப்பிட்டு கொண்டு உன் ஜீவன் தப்ப ஓடிப்போ பின்னிட்டுப்பாராதே இந்த சமபூமியில் நில்லாதே மலைக்கு ஓடிப்போ என்றார். ஆனால் அங்கு என்ன நடந்தது, லோத்தின் மனைவி திரும்பி பார்த்ததினால் அங்கு உப்புத்தூணாக மாறினாள் என்று (ஆதி 19:17, 26) பார்க்கிறோம். இப்படியாக பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் அநேக எச்சரிப்புகளை



குற்றப்படுத்தாது, நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தாலந்துகளை பெருக்கிக் காட்டி கர்த்தருடைய சமூகத்தில் நற்பெயர்பெற பிரயாசப்படுவோம். நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதிருக்க உங்களை முதலாவது சோதித்து அறியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**வேத அறிவுப்போட்டி: 148 -ன் விடைகள்**

1. யோபு - யோபு7:7
2. சபையின் மூலம் - எபே.3:10
3. யோபுவின் - யோபு42:15
4. பவுல் - பிலி.4:17
5. நீதியின், செம்மையானவனை - சங்.11:7
6. கிறிஸ்துவை - கொலோ.1:16
7. மோசே - சங்.90:8
8. மரித்தாரே - 1தெச.5:10
9. தமக்காகவும், தமக்குச் சொந்தமாகவும் - சங்.135:4
10. தேவனைப்பற்றும் அன்புக்கும், கிறிஸ்துவின் பொறுமைக்கும் - 2தெச.3:5


**வேத அறிவுப்போட்டி:**
**148-ல் வெற்றி பெற்றவர்கள்**

1. Tmt. மரகதம் திரவியம் - கோம்பை
2. M. சாலமோன்-கோடை
3. D. சைலா - ஜோலார்பேட்
4. Ira. எதிராசன் - சங்கரி



## "ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை" ரோமர் 8:1

**ஜெபியுங்கள்**



- சென்ற மாதம் திருச்சியில் நடைபெற்ற கூட்டங்களில் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரி பகுதிகளில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும் சகோதரர்கள் கலந்துகொண்டு பல நல்ல ஆலோசனைகளை வழங்கினார்கள் அவர்களுக்காக...
- நாமக்கல் மாவட்டம் பாண்டமங்களம் பகுதியில் ஐந்துபேர் கர்த்தருடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். இப்பகுதியில் ஊழியம் செய்யும் சகோ. பால்ராஜ் அவர்களுக்காக...
- கெத்சமனே தோட்டம் 25-ம் தேதி துவங்கப்பட்டது அதற்காக...
- இவ்வருட ஊழியங்களுக்காக...

## பொது அறிவு சோதனை

1.ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் என அழைக்கப்படுவது?
ஆ)பிரான்ஸ் ஆ) சுவிட்சர்லாந்து இ) ஸ்பெயின்
2. சட்டீஸ்கர் மாநிலத்தின் தலைநகரம் எது?
அ) ராய்ப்பூர் ஆ) டேராடூன் இ) பானாஜி
3. விண்வெளியில் அதிக காலம் உள்ள விண்வெளிக்கலம் எது?
அ) மிர் ஆ) மாரினார் இ) சோயுஸ்
4. 2005 உலகின் என்ன ஆண்டாக அறிவிக்கப்பட்டது?
அ) முயோர் ஆண்டு ஆ) இயற்பியல் ஆண்டு இ) எழுத்தறிவு ஆண்டு
5. உலக அமைதிக்கான நோபல் பரிசை வழங்கும் நாடு எது?
அ) நார்வே ஆ) கனடா இ) நியூசிலாந்து

**விடைகள்: 1. ஆ 2. அ 3. அ 4. ஆ 5. அ**

# புதிய பிறப்பு பற்றி நாம் ஏன் பிரசங்கிறோம்
## ரட்ஷ் ஜ்ங் டழ்ங்ஹஶ்ரீட் பட்ங் சங்ஜ் ஆண்ழ்ற்ட்

*J.C.Choate*



புதிய பிறப்பு என்றால் என்ன? அது ஒரு நல்ல கேள்வி உண்மையான விஷயமாக அந்த கேள்வி பலமுறைகள் கேட்கப்பட்டு பல் வேறுபட்ட பதில்கள் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் அதிக மானோர் இது என்ன என்பதை அறியத் தவறினவர்களாகவே இருக்கின்றனர்.

நம்முடைய பிரிவினை சபை நண்பர்கள் ஒரு தனிமனிதன் கிறிஸ்துவை தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறபோது ஒரு அற்புதமான மாற்றம் அந்த மனிதனின் வாழ்வில் ஏற்படுகிறதே புதிய பிறப்பு என விளக்கமளிக்கின்றனர். ஆனால் இதைக்காட்டிலும் மேலான ஒன்று நிச்சயமாகவே நடைபெறுகிறது.

யோவான் 3-ஆம் அதிகாரத்திற்குத் திரும்புகையில் கிறிஸ்து இந்த புதிய பிறப்பைக் குறித்து பேசுகிறதை அல்லது ஒருவன் கண்டிப்பாக மறுபடியும் பிறக்கவேண்டும் என்பதைக் கேள்விப்படுகிறோம். கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்பும் உடன்படிக்கையாகக் கொடுக்கப்படுவதற்கு முன்பும் இந்தக்காரியம் போதிக்கப்பட்டது என்பதை நினைவில் கொள்ளுங்கள் கிறிஸ்துவின் உடன்படிக்கை, அல்லது கிறிஸ்தவம் நடைமுறைக்கு வந்திருந்த போது எது அவசியமாயிருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இது போதிக்கப்பட்டது. இது இராஜ்யத்தின் வருகைக்கு முன் அல்லது சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னே போதிக்கப்பட்டது. ஆனால் கர்த்தர் இராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப்பட்டது ஒருவன் அதற்குள் சேர்த்துக்கொள்ளப்படும்படிக்கு அவன் மறுபடியும் பிறக்கவேண்டியது அவசியம் என்று கூறினார்.

ஆனால் நாம் இந்த புதிய பிறப்பினைக் குறித்து இப்போது வாசிப்போம். வேதவாக்கியம், “யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு எண்ணப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்தில் இயேசுவினிடத்தில் வந்து ரபி நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் அதற்கு



தேவனுடைய ரூபமாயிருந்தும், .......அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி.... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்” (பிலி.2:6-11). இயேசுவானவர் தம்மைத் தாமே தாழ்த்தினார் ஆதலால் தேவனால் உயர்த்தப்பட்டார். நீங்களும் நானும் எவ்வாறிருக்கிறோம்? சற்றே நம்மை நாமே நிதானித்து அறிவோம். மனமேட்டிமை, பெருமை, அகந்தை போன்றவைகள் நம்மிடம் காணப்படுகிறதா? அல்லது மனத்தாழ்மை நம்மில் உள்ளதா? இல்லையென்றால் நாம் தேவனுடைய பிள்ளைகள், இவ்வுலகத்தில் பிசாசின் பிள்ளைகளுக்குமுன் நாம் எப்படி தாழ்ந்து போவது என எண்ணுகிறீர்களா?

அண்டசராசரங்களை உண்டாக்கினவர் தேவனுடைய மடியிலிருந்தவர் தம்மை தாழ்த்த வில்லையா? தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற வசனத்தை நினைவுகூருவோம். மேலும் தேவனுடைய குமாரன் இழிவாய் நடத்தப்பட்டார், துப்பப்பட்டார், ஏளனம்செய்யப்பட்டார். அவரை உயர்த்தின தேவன் அவருடைய பலத்த கைக்குள் அடிங்கியிருப்போமானால் நம்மையும் உயர்த்துவார். இல்லை இது Prestige Issue. என்னால் விட்டுக்கொடுக்கமுடியாதென்றால், நாம் மிகுந்த வேதனைப்பட வேண்டியிருக்கும். நாம் பிடிவாதமாய் இருக்கும்போது வெற்றியைப்பெறுவது கூடாத காரியம். ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் (பிலி.2:3). சிலவேளைகளில் நம்முடைய கிறிஸ்தவ ஓட்டத்தில் பிரச்சனைகள் வரலாம். நம்முடைய பக்தியின் ஜீவியத்தையும், உண்மையான நடக்கையினையும் உலகத்தார் பார்த்து பொறுக்கக் கூடாமல் பொறாமை கொண்டு நம்மை குற்றப்படுத்திக் கொண்டேயிருக்கலாம். அப்பொழுது நம்மால் மனத்தாழ்மையுடன் நடந்துகொள்ளமுடியாமல் நம்முடைய கோபத்தினை வெளிப்படுத்திவிடுவோம். ஆனால் நாமோ கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாக நம்முடைய ஆவியை அடக்குகிறவர்களாக இருக்கவேண்டும். தேவனுடைய வசனங்களை நினைவு கூர்ந்து இயேசு வார்த்தையினாலே பிசாசை ஜெயித்ததுபோல நாமும் தேவவசனங்களால் பிசாசின் கிரியைகளை மேற்கொள்ளவேண்டும். நம்மை இவ்வுலகம் வேதனைப்படுத்தும்போது, இயேசுவையும் வேதனைப்படுத்தியது என்பதை நினைத்து பொறுமையோடிருப்போம்.

வேதபாரகர், பிரதான ஆசாரியர், சதுசேயர், பரிசேயர் அனைவரும் இயேசுவை குற்றப்படுத்தும்படியே வகைதேடினார்கள். சிலுவையின் கடைசிபரியந்தமும் ஏளனம் செய்தனர். “மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை, இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம், தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்” (மத்.27:42-43) ஆனால் இயேசுவோ, “.....பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்...” (லூக்.23:34) முடிவில் என்னநடந்தது? “...தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,.. எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைத் அவருக்குத் தந்தருளினார் (பிலி.2:9-11). சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி.2:8) தேவனால் உயர்த்தப்பட்டார்.

அன்பு சகோதரியே, கிறிஸ்துவின் சிந்தை நம்மில் இருக்குமானால், கிறிஸ்துவினிமித்தம் மனத்தாழ்மையாயிருப்போமானால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப் போமானால், மேலும் அவருடைய பலத்தகைக்குள் அடிங்கியிருப்போமானால், நாமும் உயர்த்தப்படுவோம். ஆவிக்குரிய பெருமை மற்றும் சரீரத்திற்குரிய பெருமைகளை இப்புத்தாண்டில் நம்மைவிட்டு அகற்றுவோம். “கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்” (யாக்.4:10).

மகிமையுமாயிருக்கிறான். ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள். புருஷனிலிருந்து தோன்றின வளாயுமிருக்கிறாள்.

- இரண்டாவது முக்கியமான கருத்து என்னவென்றால் புருஷனுக்கும் ஸ்திரிக்குமிடையே தோற்றத்தில் வெளிப்படையான அடையாளமிருக்க வேண்டும். புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்குக் கனவீன மாயிருக்கிறதென்றும், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே போதிக்கிறது.
- ஸ்திரீயினது தலைமயிர் அவளுக்கு துணியாலான முக்காட்டிற்குப் பதிலாக (முக்காடாக) கொடுக்கப்பட்டிருக்றது.
- தலையின் முக்காடு என்பது தேவனால் ஒழுங்குப்படுத்தப்பட்டது கூடுதலாக துணியிலான முக்காடு பல வித்தியாசமான கலாச்சார நடைமுறைக்கேற்ப

# நீங்கள் உயர்த்தப்படவேண்டுமா?

## Should YouBe Exalted?

*-Glory Arjunan*



அன்பான சகோதரிகளே இப்புத்தாண்டில் புதுப்பொழிவுடன் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். கர்த்தர் இவ்வருடத்தை நமக்கு கூட்டிவழங்கியுள்ளார். இவ்வருடத்தில் நீங்கள் உயர்த்தப்பட வேண்டுமா? அப்படியானால் ஒன்று செய்யுங்கள் “மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையுள்ளவர்களாக எண்ணக்கடவீர்கள்” (பிலி.2:3) என்ற அன்பின் கட்டளையை நம் முன் வைக்கிறது பரிசுத்தவேதாகமம். இக்கட்டளையானது கைக்கொள்ளுவதற்குச் சற்றுக்கடினமாயிருக்கலாம். வீட்டிலும் சரி, வேலைபார்க்கும் இடங்களிலும் சரி, ஆவிக்குரிய உலகிலும் சரி, எங்குபார்த்தாலும் ‘பெருமை’ மனமேட்டிமை, அகந்தை போன்ற ஆகாத பிசாசின் குணங்கள் தலைவிரித்தாடுகிறது. கிறிஸ்தவுக்குள்ளிருக்கும் நமக்கு இக்குணங்களைக் கொண்ட ஜனங்கள் மத்தியில் வாழ்வது சிலவேளைகளில் மிகக்கடினமாக இருக்கலாம். கிறிஸ்துவை அறியாத, அல்லது ஏற்றுக்கொள்ளாத மற்றவர்களைக் குறித்து, ஆதியும் அந்தமுமானவர் சொல்லுகிறார்; “அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும் அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்.....” (வெளி.22:11) எனக் கூறும் வேளையில், இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, தேவனுடைய பிள்ளையாய் ஜீவிக்கிற நம்மைப் பார்த்து “.....நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்” (வெளி.22:11) எனக் கூறுகிறார். அன்பு சகோதரியே நாம் உயர்த்தப்படவேண்டுமானால் மற்றவர்களை மேன்மையுள்ளவர்களாக எண்ணுவோம்.

இன்று கிறிஸ்தவ வட்டாரங்களில் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட சில வாக்குத்தத்தங்களைப் பிடித்துக்கொண்டு கர்த்தர் என்னை வாலாக்காமல் தலையாக்குவார் கீழாக்காமல் மேலாக்குவார் என உரிமைபாராட்டி அநேக நேரங்களில் ஏமாற்றம் அடைகின்றனர். நிச்சயமாகவே தேவன் நம்மை இவ்விதமாய் உயர்த்த வல்லவர். ஆனபோதிலும் தேவனால் உயர்த்தப்பட வேண்டுமானால் இயேசுவின் அடிச்சுவடை பின்பற்றவேண்டியது அதிமுக்கியமானது. இயேசு நமக்கு மாதிரியை வைத்துச்சென்றார். நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவை நோக்கிப் பாருங்கள். “அவர்



நிக்கொதேமு ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது அதன் சத்தத்தைக் கேட்கிறாய் ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்திற்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். அதற்கு நிக்கொதேமு இவைகள் எப்படி ஆகும் என்றான். இயேசு அவனை நோக்கி நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன்; நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை; பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசிவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனே யல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவருமில்லை (யோவா. 3:1-13).

முன்னதாக குறிப்பிட்டவற்றிலிருந்து, தயவு செய்து இதன் அமைப்பைக் கவனியுங்கள். நிக்கொதேமு என்னும் பேருள்ள ஒரு மனிதன் இராக்காலத்தில் இயேசுவினிடத்தில் வந்தான். அவன் பரிசேயனாகவும் யூதருக்குள்ளே அதிகாரியாகவுமிருந்தபடியினால், இவன் தன்னுடைய சந்திப்பு ரகசியமாகயிருக்கவேண்டுமென அவன் அந்த நேரத்தில் வந்திருப்பான் என சிலர் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். பரிசேயர்கள் யூதமத பிரிவைச் சேர்ந்தவர்களாகயிருந்தனர். அவர்கள் உயிர்த்தெழுதலும், தேவதூதர்களும் உண்டென நம்பினார்கள். யூதர்களுடைய அதிகாரியாக இருப்பதென்பது அவன் ஒரு மூப்பனாகவும் மதிப்பிற்குரிய ஒரு பதவியை உடையவனாகவும் இருந்திருக்கின்றான் என்று அர்த்தமாகிறது. எப்படியாகிலும் இயேசுவினிடத்தில் வருகையில் அவன் அவரிடத்தில் விசுவாசமுள்ளவனாக இருந்தவன் எனக் குறிப்பிடுகிறான், அத்தோடுகூட அவன் இயேசுவினிடத்தில் ரபீ அல்லது போதகர் என்றும் மேலும் இயேசு அற்புதங்களைச் செய்ய வல்லமையுடைய வராயிருக்கிறபடியினால், இது அவர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதற்கு சாட்சியாக இருக்கிறது எனவும் குறிப்பிடுகிறான். அதற்கு இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தைக்காண, அவன் மறுபடியும் பிறப்பது அவசியமாயிருக்கிறது என்ற திட்டத்தினை அங்கு குறிப்பிடுகிறார். ஆனால் கிறிஸ்து என்ன சொல்லிக்கொண்டிருந்தாரென நிக்கொதேமு அறியாதபடியினால் இது அவனை குழப்பமடையச் செய்தது பின்பு அவன், ஒருவன்

முதிர்வயதாயிருக்கையில் எப்படி மறுபடியும் பிறக்கமுடியும் என்பதை அறிய விரும்பினான். அவன் தொடர்ந்து அந்த மனிதன் தன் தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்று கேட்டான். நிச்சயமாக அவன் அவ்வாறு பிறக்கமுடியாது, இயேசுவும் இவ்விதமான அர்த்தத்தில் போதிக்கவும் இல்லை. கிறிஸ்து ஒரு ஆவிக்குரிய பிறப்பினைக் குறித்து பேசிக்கொண்டிருந்தார் ஆனால் நிக்கெதேமு ஒரே பிறப்பினைப் பற்றி அறிந்திருந்தபடியினால் அவன் சரீரப்பிரகாரமான பிறப்பினைக் குறித்து நினைத்துக் கொண்டிருந்தான்.

தொடர்ச்சியாக இயேசு திரும்பவும் புதிய பிறப்பினைக் குறித்து பெரிய விளக்கத்துடன் தெளிவுப்படுத்தினார். ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு அவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கவேண்டியது அவசியமாயிருக்கிறதென்றும் இதைத்தவிர அதில் பிரவேசிப்பதற்கு வேறொரு வழியே கிடையாது என்றும் இன்னும் பல வார்த்தைகளின் மூலம் அவனிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

ஆனால் இந்த வார்த்தைகளை நாம் இன்னும் கொஞ்சம் அதிகமாக ஆராய்ந்து பார்ப்போமாக முதலாவது அவர் ஜலத்தினால் பிறப்பது அவசியம் என்று சொன்னதை கவனியுங்கள். பிறக்க வேண்டுமென்பது வரக்கூடிய ஒன்று. ஒரு பிறப்பு என்பது புதியவாழ்வை குறிப்பாகத் தெரிவிக்கிறது. ஆனால் தண்ணீரைப் பற்றிய காரியமென்ன? இயேசு நிக்கொதேமுவுக்கு இரண்டாம் முறை ஒருவன் தன்தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்து மறுபடியும் பிறப்பதிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டது என விளக்கினபடியினால் சரீரப்பிரகாரமான பிறப்பிற்கு தண்ணீர் ஒன்றும் செய்கிறதில்லை. நாம் இந்த ''தண்ணீரை குறித்து நினைக்கையில் இன்னொரு விதியையும் நம்முடைய நினைவில் கொள்ள வேண்டும் அதாவது மற்ற எல்லா இடங்களிலும் இது எங்கு பயன்படுத்தப்படுகிறது இது ஆவிக்குரிய தண்ணீரென்றால் அது யோசனை செய்ய வேண்டிய ஒன்று, இது ஜீவத்தண்ணீராகச் சொல்லப்பட்டுள்ளது. அல்லது இது வெளிப்படையான தண்ணீரில்லை என்பதை குறிக்கும் ஒன்றாகும். இன்னொரு வகையில் பல வசனங்களில் தண்ணீர் என்ற வார்த்தை காணப்படுகிற இடத்தில் இது வெளிப்படையான அல்லது உண்மையான தண்ணீர் என குறிப்பிடப்படுகிறது. ஆனால் இது பயன்படுத்தப்படும் வழி என்ன? தண்ணீர் என்ற வார்த்தை மட்டும் குறிப்பிடப்படுகையில் நாம் அவர் உண்மையான ஜலத்தைப் பற்றி பேசினார் என்ற முடிவுக்கு வரவேண்டும். இப்போது அடுத்த கேள்விக்குச் செல்வோம். தண்ணீரோடு சம்பந்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட வேதவாக்கியத்தில் நாம் என்ன செய்ய கட்டளையிடப்பட்டுள்ளதாக வாசிக்கிறோம். நீங்கள் கர்த்தருடைய வார்த்தையை நன்கு அறிந்தவர்களாக இருப்பீர்களென்றால் நீங்கள் அங்கே ஒரே ஒரு கட்டளை அல்லது செயல், அதாவது தண்ணீரோடு சம்பந்தமுள்ளதும் அது ஞானஸ்நானமே என்பதையும் அறிந்துகொள்வீர்கள் அப்போஸ்தலர் 8:26-39-ல் எத்தியோப்பியாவில் இருந்து வந்த ஒரு மனிதன் கிறிஸ்துவைப்பற்றி போதிக்கப்பட்டவனாகி அதன்பின் தண்ணீரில் இறங்கி ஞானஸ்நானம்



கனவீனப்படுத்துவதை தேவன் விரும்பவில்லை. ஒரு கிறிஸ்தவ பெண்ணும் நாகரீகமென்று புருஷனைப்போல தன் தலைமயிரை குட்டையாகக் கத்தரித்துப்போட்டு முக்காடிட்டுக் கொள்ளாமல் தன்னுடைய கணவனை கனவீனப்படுத்துவதையும் தேவன் விரும்பவில்லை என்பதை விளக்குவதாகும்.

வேதாகமத்தில் விளக்கப்பட்டுள்ள இந்தக் குறிப்பிட்ட ''முக்காடிட்டுக்கொள்ளுதல்'' என்ற வினாவானது கலாச்சார வழக்க மாற்றத்திற்கேற்ப மாற்றப்படுதற்கில்லை. இது அதிகாரமுடைய தேவனுடைய கட்டளையைச் சார்ந்ததாயும், மேலும் ஸ்திரீ - புருஷன் இவர்களது நடைமுறையும் தோற்றமும், ஆதாம் ஏவாளுடைய காலத்திற்கு அழைத்துச் செல்லு கிறதாகவுமிருக்கிறது.

ஆனால் இங்கே முக்காடிட்டுக் கொள்ளுவது பற்றிய கேள்வி, தன்னுடைய கலாச்சார காலத்திற்கேற்ப மாறக்கூடியதாகவும் பாவமில்லாததாகவுமிருக்கிறது.

தங்களுடைய திருமணத்திற்கு முன் ஈசாக், ரெபெக்காளைக் காண்பதற்கு வயல்வெளியிலே வருகிறதை ரெபெக்காள் கண்டபோது, ''அவள் முக்காடிட்டு தன்னை மூடிக்கொண்டாள்'' என ஆதியாகமம் 24:65 கூறுகிறது. திருமணமாகாத பெண்கள் அடக்கத்திற்கு அடையாளமாக முக்காடிட்டுக்கொள்வது அந்த இடத்தின் கலாச்சார வழக்கம் என தெளிவுபடுத்துகிறது.

இருந்த போதிலும், தாமார் யூதாவை வேசிதனத்துக்கு உட்படுத்த, ''...... அவள் தன்கைம் பெண்மைக்குரிய வஸ்திரங்களைக் களைந்து போட்டு (முக்காட்டுத் துணி என தெளிவாக வெளிப்படுத்தபடவில்லை) முக்காடிட்டுத் தன்னை மூடிக்கொண்டு.......'' என ஆதி. 38:14ல் நாம் வாசிக்கிறோம். இந்த இடத்தின் கலாச்சார வழக்கத்தில் முக்காடு வேசிக்கு அடையாளமாக மாறியிருந்தது.

''...... அவள் அழகுள்ளவளானபடியால்'' (ஆதி. 12:14, 26:7) சாராளும், ரெபெக்காளும் எகிப்து, பெலிஸ்திய ராஜாக்களின் அந்தப்புரத்திற்குள் கொண்டு செல்லப்பட்டார்கள். என வாசிக்கிறோம். அந்நாட்களில் அவ்விடத்து வழக்கம் பெண்கள் முக்காடிட்டுக் கொள்ள வேண்டியது அவசியம் என வலியுறுத்தவில்லை என்பதை என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

இன்று பெண்கள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் ஒழுக்கமற்ற செயல் அல்லது கணவனுக்கு அவமதிப்பை கொண்டுவரும் செயல் என கலாச்சார வழக்கத்தில் கருதப்பட்டால் கலாச்சார வழக்கத்தைப் புறக்கணிப்பதற்குப் பதிலாக கலாச்சாரத்தை மதிப்பது ஞானமுள்ளதாக இருக்கும் அல்லது தன் கணவனுக்கு கீழ்ப்படியும் மனைவி என்பதைக் காண்பிக்க வேறு ஏதாவது 'அடையாளம்' சமுதாய வழக்கத்தில் இருக்குமானால் அந்த வழக்கத்தை பின்பற்றுவது சிறந்ததாக இருக்கும் அப்படியானால் அவள் ''........விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்.'' (1 தீமோ 5:14)


இப்பகுதியின் முடிவுரையில் இதுவரையில் பார்த்த எல்லாக் கருத்துக்களையும் மறுபடியும் காண்போம்.

● இதன் முழுப்பகுதியும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரக் கட்டளைக்கு ஒத்ததாகவே இருக்கிறது. கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார். புருஷனுக்குக் கிறிஸ்து தலையாயிருக்கிறான். புருஷன் ஸ்திரீக்காக உண்டாகப்பட்டவனல்ல, புருஷனானவன் தேவசாயலும்

# ஜெபம் பண்ணுகிறபோது ஸ்திரீயானவள் தன் தலையை மூடிக்கொள்வது அவசியமா?

## Is A Woman Required To Cover Her Head While Praying?

*-Betty*



ஸ்திரீயானவள் கண்டிப்பாக ஒரு துணியினால் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும் என்ற போதனையைத் தெரியப்படுத்தும்படி பரிசுத்த ஆவியானவர் சித்தம் கொண்டிருப்பாரென்றால் ஏன் மற்ற வசனங்களிலும் மிக திட்டமான வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை. பதிலாக அவர் முக்காடிடுதல் என்ற பதத்தை மாத்திரமே பயன்படுத்தினார் மேலும் ஸ்திரியினது தலைமையிரே முக்காடாகக் கொடுக்கப் பட்டுள்ளது என தெளிவாகக் கூறியுள்ளார். மேலும் அவர் அவளது தலைமையிரானது ஒரு முக்காட்டுத் துணியல்ல அவளுக்கு மகிமையாக இருக்கிறது என விளக்கமளிக்கிறார்.

இதற்கு மாறாக புருஷனுடைய தலை மூடிக்கொள்ளப்பட வேண்டியதில்லை. எல்டர்டு எக்லோஸ் இதுபற்றி "அவன் தலை மூடப்பட்டிருத்தல்" என்பது ஒரு வியாக்கியானமே தவிர இது ஒரு மொழிபெயர்ப்பல்ல என எழுதினார். "அவனது தலையிலிருந்து ஏதோ தொங்கி கொண்டிருத்தல்" என லென்ஸ்கி மொழிபெயர்த்துள்ளது சரியானதாக உள்ளது.

1. கொரிந்தியரைக் குறித்த இவரது வியாக்கியானத்தில் பெட்டன் கோஃப்மேன் கூறுகிறார், விவாதத்தைத் தெளிவுபடுத்தக் கூடிய இந்த கருத்து பின்பு அப்போஸ்தலரால் "புருஷன் தலைமயிரை நீளமாக வளர்க்கிறது. அவனுக்குக் கனவீனமாயிருக்கிறது" (வச.14) என தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது போல தலையிலிருந்து வேண்டிய அளவு நீளமாகத் தொங்கி கொண்டிருத்தல் என்பது "நீளமான தலைமயிர்" என்ற பதத்திற்கு ஒப்பிடப்படும்.

2-ம் நூற்றாண்டில் இதுபற்றி கிளமெண்ட் அலெக்சாண்டர் தன்னுடைய கூற்றில் புருஷனுடைய தலைமயிர் நீளமாயிருப்பதைக் குறித்து இவ்விதமாக எழுதுகிறார்; தலைமயிரானது நீளமாக கீழே தொங்கி கண்களை மறைப்பதைபோல வளர்வதில்லை....... கத்தரிக்கப்படவேண்டியதாயிக்கிறது.... ஸ்திரீகள் தங்கள் தலைமயிரை அலங்கரித்துக் கொள்வது போல தலையிலிருந்து பின்னப்பட்டு தொங்கவிடப்படலாகாது". (Ante Nicene Fathers, Wm B.Eerdmans Publishing Co., லிருந்து குறிப்பிடப்பட்டுள்ளது)

நிச்சயமாக ஸ்திரீயானவளைக் காட்டிலும் புருஷனானவன் தன் தலைமயிரை குட்டையாக அடையாளப்படுத்தி கொண்டிருப்பது உண்மையென சுபாவமே தெளிவுபடுத்துகிறது போல வரலாறு முழுவதும் உலகமுழுவதும் இது பொதுவான உண்மையாகக் கருதப்படுகிறது. இது புருஷன் சிறிதளவுகூட தலைமயிரை வைத்துக்கொள்ளக்கூடாது என பொருள்படுவதில்லை. "நீளம்" என்பது சென்டிமீட்டர் அல்லது இஞ்சில் குறிப்பிடப்படவில்லை. மாறாக, இது நமது உடலின் ஒரு பாகமாயிருக்கிறபடியால் சரீரத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வேறுபாட்டை காண்பிக்க தலைமயிரை நீளமாக வளர்ப்பது உதவியாகயிருக்கிறது.

இந்த பகுதியின் நோக்கம்: புருஷர்கள் ஒரு ஸ்திரீயினுடைய தோற்றத்தை உடையவர்களாய் ஆராதனையில் தமக்கு முன் வந்து தம்மை



பெற்றுக்கொண்டவனாக இருந்தான் என நாம் வாசிக்கிறோம். இத்தோடுகூட ஒருவன் தண்ணீர் முழுக்கினால் கண்டிப்பாகப் பிறக்க வேண்டுமென கிறிஸ்து சொன்னார். ஒருவன் தண்ணீர் முழுக்கினால் எவ்வாறு பிறக்கமுடியும்? நல்லது இங்கே ஞானஸ்நானத்திற்கு தண்ணீர் குறிப்பிடப்பட்டிருக்குமானால் தண்ணீரில் ஞானஸ்நானம் என்பது ஒரு அடக்கம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் (கொலோ 2:12), மேலும் தண்ணீரில் அடக்கம் என்றால் பிறகு ஒருவன் அந்த தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது வெளித்தோன்றுதல் அல்லது ஒரு பிறப்பின் அனுபவம் என்று அர்த்தமாகிறது. மேலும் அப்போஸ்தலர் பவுல் ஞானஸ்நானத்தில் என்ன நடக்கிறது என இங்கே விளக்குகிறார். (ரோம. 6:3,4).

ஜலத்தினால் பிறந்திருத்தல் அல்லது ஞானஸ்நானப்படுத்தப்படுத்தலைப் பற்றி தொடர்ந்து நாம் சிந்திக்கையில், ஒருவன் மறுபடியும் பிறந்திருக்கிறான் அவன் வெளித்தோன்றியிருக்கிறான் அல்லது ஒரு வாழ்வை பெற்றிருக்கிறான் என நாம் நினைவுபடுத்தப்பட்டிருக்கிறோம். மீண்டும் அப். பவுல் ரோமர் 6:3 மற்றும் கலா. 3:26,27-ல் ஞானஸ்நானம் ஒருவனை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது, மேலும் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறவர்கள் புதிய சிருஷ்டிகளாயிருக்கிறார்கள் என்று நமக்குச் சொல்லுகிறபடியினால் இது தண்ணீரோடு இணைக்கப்பட்டுள்ளது. பவுல், "இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (2 கொரி 5:17) என்றான். கிறிஸ்தவர்களிடம் பேதுரு சொன்னபோது, "நீங்கள் வளரும்படி புதிதாய்ப்பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 பேது 2:3) என்றான்.

இரண்டாவதாக கிறிஸ்து ஒருவன் ஆவியினால் பிறந்திருக்க வேண்டும் என்று சொன்னார் இங்கே அந்த ஆவியானவர் யார்? பவுல் எபேசியர் 4:4 ல் ஒரே ஆவியும் உண்டு என்றான் மேலும் அந்த ஆவி எப்படியிருக்கும்? அவர் நிச்சயமாகவே பரிசுத்த ஆவியானவர் அல்லது பரிசுத்த ஆவி (யோவா 14:26; அப் 1:8; அப் 2:38; 1தெச.4:8) ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வேலை என்னவாயிருந்தது? ஒன்று அவர் அப்போஸ்தலர்களை வழிநடத்தினார். மேலும் மற்றவர்கள் கர்த்தருடைய வார்த்தையை எழுதும்படி செய்தார். அதற்கு முன்பாக அவர் தேவனுடைய வார்த்தையை எழுதும்படிக்கு முற்காலத்து பரிசுத்தமனுஷர்களை வழிநடத்தினார். (2பேது 1:21) வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்று பவுல் எழுதினான் (2தீமோ. 3:16,17) ஆனால் அந்த ஆவியின் வார்த்தையில் அல்லது கர்த்தருடைய வார்த்தையில் என்ன வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சத்தியம் (யோவா 17:17), கிறிஸ்துவின் சுவிசேஷம் (ரோமர் 1:16), அல்லது ஒருவன் இரட்டசிக்கப்பட என்ன செய்யவேண்டும் (அப். 2:37,38). ஒருவன் ஆவியானவரின் வார்த்தையை விசுவாசித்தால் அவன் அதற்குக் கீழ்ப்படியமாட்டானா? பேதுரு தன்னுடைய நாட்களிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு, "...நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள்

ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்; அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. மாம்சமெல்லாம் புல்லைப்போலவும் மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே (1 பேது 1:22 - 25). ஒருவன் ஆவியினால் பிறக்க வேண்டும் என்று கிறிஸ்து யோவான் 3:5ல் சொன்னதை கவனியுங்கள் ஆனால் 1 பேதுரு 1:23ல் தேவனுடைய வார்த்தையினால் ஜெநிபிக்கப்பட்டீர்கள் என தேவஆவியினால் ஏவப்பட்ட மனிதன் கூறினான். ஆனால் யார் அந்த வார்த்தையைக் கொடுத்தது? ஆவியானவர். ஆனபடியினால் ஆவியினால் பிறப்பதும் தேவனுடைய வார்த்தையினால் பிறப்பதும் ஒன்றே. ஆனால் விசுவாசம் எப்படிவருகிறது? தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் வருகிறது. (ரோம. 10:17). பின்பு ஒருவன் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தால் அவன் அதற்குக் கீழ்ப்படிவான், அவன் அதற்குக் கீழ்ப்படிந்தால் அவன் ஞானஸ்நானம் பெறுவான் அல்லது தண்ணீரில் அடக்கம் செய்யப்பட்டு, இவ்விதமாக அவன் இரட்சிக்கப்படுவான் (கொலோ 2:12; மாற். 16:16) அதுவே பேதுரு 1பேது 1:23ல் கூறியவை; அதாவது நாம் பரிசுத்த ஆவியினால் சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதன்மூலம் மறுபடியும் பிறந்திருக்கிறோம் அல்லது பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையின் மூலம் ஒருவனை வழிநடத்துவது என்பதாகும்.

ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது என்பது ஒருவன் தேவனுடைய வார்த்தையின் போதனைக்குக் கீழ்படிந்து கிறிஸ்துவில் விசுவாசம்வைத்து, தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு. தன்பாவங்கள் மன்னிக்கப்படும்பொருட்டு தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போது, அதன்பின் கர்த்தர் அந்த மனிதனை இரட்சித்து தம்முடைய ராஜ்யம் அல்லது சபையில் சேர்க்கிறார். அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தை வாசியுங்கள் உண்மையாகவே அன்று எருசலேமிலிருந்த ஜனங்கள் என்ன செய்தார்கள் என்பதை அறிந்துகொள்வீர்கள் இவ்வளவு நேரமாக பயன்படுத்தப்பட்ட சிறிதும் தவறில்லாத அந்த வார்த்தைகளைத் தவிர மறுபடியும் பிறப்பதைக் குறித்துச் சொல்ல வேறொன்றும் கிடையாது, ஆனால் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தபோது அது அவனை தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கப்பண்ணுகிறது என்று கிறிஸ்து சொன்னதினால் அவர்கள் மறுபடியும் பிறந்திருக்கிறார்கள் எனவும் மேலும் அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் காண்கின்ற ஜனங்கள் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தை கேள்விப்பட்டு அதை விசுவாசித்து தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி தங்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது கர்த்தர் அவர்களை இரட்சித்து சபையிலே சேர்த்துக்கொண்டார் என நாம் அறிகிறோம்.



ஆனால் ராஜ்யம் மற்றும் சபையைக் குறித்த காரியம் என்ன அவைகள் வேறுபட்ட ஸ்தாபனங்களாக இல்லையா? இல்லை, தேவவாக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள படியால் ஒரே ஸ்தாபனம் அல்லது அமைப்பாக ராஜ்யம் மற்றும் சபை அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறபடியினால் பல்வேறுபட்ட ஸ்தாபனங்களாக இல்லை. கொலோசெயார்1:14ல் உதாரணமாக கொலோசெய சபைக்கு பவுல் எழுதுகின்றான் இன்னும் அவன், "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தின வருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம். "குமாரனாகிய அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ 1:13,14) என்கிறான். அப்போஸ்தலர் 2-ல் ஜனங்கள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது அவர்கள் இரட்சிக்கப்பட்டு சபையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டார்களெனவும் ஆனால் அப்போஸ்தலர் 8-ல் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை சமாரியர்கள் விசுவாசித்தபோது புருஷர்களும் ஸ்திரீகளும் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள் என அவ்வசனம் கூறுகிறது. (அப் 8:12) அப்.2-ல் குறிப்பிடப்பட்ட ஜனங்கள் சபை அங்கத்தினர்களாகவும் சமாரியர்கள் ராஜ்யத்தின் அங்கத்தினர்களாகவும் மாறி இவ்விதமாக இரு வேறுபட்ட அமைப்புகளாக இருந்தது என்று அர்த்தமாகிறதா? இல்லை அவைகள் இரண்டும் ஒரே அமைப்பாகவும் ஸ்தாபனமாகவும் இருக்கிறது.

ஆனபடியினால் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறந்திருக்கிறபோது அவன் கர்த்தருடைய வார்த்தையை கேள்விப்படுகிறான் அவன் அதை விசுவாசிக்கிறான். தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்புகிறான். கிறிஸ்துவில் கொண்டுள்ள தன்னுடைய நம்பிக்கையை அறிக்கையிட்டு, இவ்வாறாக அவன் இரட்சிக்கப்பட்டு அதன்பின் கர்த்தர் அவனை தம்முடைய சபையில் சேர்க்கிறார், அதாவது அவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறான். கர்த்தருடைய குடும்ப அங்கத்தினனாக, ஒரு புதிய சிருஷ்டியாக, ஒரு புதிய கிறிஸ்தவனாக, அவன் வளர்ந்து, பெருகி, விசுவாசத்தில் பலங்கொண்டு ஒரு முழு வளர்ச்சியடைந்த கிறிஸ்தவனாக இருப்பான். நாம் கர்த்தரை பிரியப்படுத்துகிறவர்களாயிருந்தால், நித்தியஜீவனைக்குறித்த நம்பிக்கை கொண்டவர்களாயிருந்தால், இதை நாம் செய்யவேண்டும். இதை நாம் ஒவ்வொருவருக்கும், மேலும் உலக முழுவதுக்கும் பிரசங்கிக்க வேண்டும்.

நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்தவரா? இல்லையென்றால், இதைச்செய்யும்வரை, நீங்கள் இழந்தவராகவும் இன்னும் இழந்து போகிறவர்களாகவும் இருப்பீர்கள். இவ்வுலத்திலும், வரப்போகிற உலகத்திலும் நீங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு மறுபடியும் பிறப்பதற்கு வேறு வழியே இல்லை. நீங்கள் இந்த காரியங்களை அறிந்து கொள்ளும் வரைக்கும் மேலும் நீங்கள் அவர் கற்பித்திருக்கிறபடி செய்யும்வரைக்கும் தொடர்ந்து கற்றுக்கொள்ளவேண்டுமென நாங்கள் ஜெபிக்கிறோம்.